விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 139 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 24 சனிக்கிழமை (07.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# ஹர்த்தாலால் நாடு முற்றாக முடக்கம்

◈ பல இடங்களில் ஆர்ப்பாட்டம்
◈ மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

*(கொழும்பு)* நாடளாவிய ரீதியில் அரசுக்கு எதிராக நேற்று மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் எதிர்ப்பு போராட்டத்தில் நாடு முற்றாக முடங்கியது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்படைந்தது. மேலும் அரசுக்கு எதிராக நேற்று பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

(15 ஆம் பக்கம் பார்க்க)



## ராஜினாமாவுக்கு தயாராகும் அமைச்சர்கள்

(கொழும்பு)
இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி முற்றுப் புள்ளி இன்றி தொடர்ந்த வண்ணமே உள்ளது.
இந்நிலையில் பல சர்ச்சைகளுக்கு மத் 15

## நெருக்கடிக்கு தீர்வுகாண விசேடகுழு

(கொழும்பு)
அரசியலமைப்பில் தேவையான திருத்தங்களை மேற் கொள்வதற்கும் தற்போதைய பொருளாதார நெருக் கடிக்கு தீர்வு காண் 15




அரசுக்கு எதிராக பல்கலை மாணவர்களின் நேற்றைய போராட்டம்

# அவசரகால சட்டம் மீண்டும் பிரகடனம்

## ஜனாதிபதியால் விசேட வர்த்தமானி வெளியீடு

*(கொழும்பு)* இலங்கையில் பொது அவசரகாலச் சட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் மீண்டும் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)




## ரஞ்சித் சியம்பலாபிட்டிய மீண்டும் இராஜினாமா

(கொழும்பு)
பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதவி விலக தீர்மானித்துள்ளார்.
அவர் தனது இராஜினாமா கடிதத்தை அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவிடம் நேற்று கையளித்துள்ளார்.
ரஞ்சித் சியம்பலாபிட்டிய 15

## அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் யாழ். போதனாவில் தட்டுப்பாடு

### மருத்துவர் சி. யமுனாநந்தா



(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன் இது ஓர் மருத்துவப் பேரிடர் என யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப் பாளரும் மருத்துவருமான சி.யமுனாநந்தா தெரிவித்தார். 15

## பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு மகிந்தவிடம் ஜனாதிபதி கோரிக்கை

அமைச்சரவைக் கூட்டத்தில் கோரியதாக தென்னிலங்கை ஊடகம் செய்தி

(கொழும்பு)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கோரியுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத் தின் போதே ஜனாதி 15

## தொடர் போராட்டங்களால் பாராளுமன்ற அமர்வுகள் 17 ஆம் திகதிவரை ஒத்திவைப்பு

(கொழும்பு)
பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.
பாராளுமன்றில் ஏற்பட்ட அமளி காரணமாக 10 நிமிடங்களுக்கும் அதிக காலம் நேற் றைய சபை நடவடிக் 15

## ஒன்றுகூடும் உரிமைகளை அதிகாரிகள் மதிக்க வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

(கொழும்பு)
கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைகளை இலங்கை அதிகாரிகள் மதிக்க வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக் காட்டியுள்ளது. மனித உரிமைகளை அமைதியான முறையில் செயற்படுத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரபல தொழிற்சங்கவாதி ஐ.தி.சம்பந்தன் காலமானார்



(லண்டன்)

தமிழ் ஆர்வலர், லண்டன் சுடரொளி சஞ்சிகையின் ஆசிரியர், எழுத்தாளர், நூலாசிரியர், சமூகசேவையாளர், சைவத் தொண்டர் எனப் பன்முக ஆளுமையை தன்னகத்தே கொண்ட ஐ.தி.சம்பந்தன் கடந்த 03.05.2022 அன்று லண்டனில் காலமானார்.

காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்ட ஐ.தி.சம்பந்தன் தான் தொழில்புரிந்த துறைமுக அதிகார சபையில் ஆரம்பித்த தமிழர்களுக்கான தொழிற்சங் கம் அவரை திரும்பிப் பார்க்க வைத்தது. தந்தை செல்வா, அமிர்தலிங்கம் போன்றோருடன் அவர் கொண்டிருந்த தொடர்புகள் அலாதியானவை.

சொந்த நாட்டில் வாழமுடியாமையின் காரணமாக லண்டனுக்கு புலம்பெயர்ந்த ஐ.தி.சம்பந்தன், அங்கு ஆற்றிய பணி அளப்பரியவை. லண்டனிலிருந்து கொண்டே ஈழத்தமிழர்களின் இன்னல்களை களைவதற்காக அவர் நடத்திய போராட்டங்கள் ஏராளம்.

ஐ.தி. சம்பந்தன் தமிழ் தந்த தாதாக்கள், செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், போராட்டம், ஐரோப்பாவும் ஈழத்தமிழர்களும், மலையக இலக்கிய கர்த்தாக்கள், குமுதினி படுகொலைகள் போன்ற ஏராளமான நூல்களின் வெளியீடுகளுக்கு சொந்தக்காரர் ஆவார். (ம-7)

# பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் வாய்ப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் நடனக்கலை மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடவிதானங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளில் பங்குகொள்ள முடியாத பரீட்சார்த்திகளுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.


பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதா இதனைத் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் பொது நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால், குறித்த பரீட்சையில் தோற்ற முடியாத நிலை பரீட்சார்த்திகளுக்கு ஏற்பட்டது.

இதன் காரணமாக, இன்றைய தினம் குறித்த பரீட்சார்த்திகள், தங்களுக்கு உரித்தான பரீட்சை மண்டபங்களுக்கு சென்று, அதற்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுமாறும் அவர் குறிப்பிட்டார். (ம-7)

# பேராதனை வேந்தராக ஜி.எச்.பீரிஸ் நியமனம்



(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

1960இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் முதல்தரப் பட்டம் பெற்ற பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ், 1965இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பொருளாதார புவியியல் துறையில் தனது முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராக தனது முதல் நியமனத்தைப்பெற்ற அவர், 44 வருடங்களாக பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார்.

பேராசிரியர் ஜி.எச்.பீரிஸ், உலகின் பல்வேறு பகுதிகளில் இடம்பெறும் அரசியல் மாற்றம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ள நிபுணர் ஆவார். (ம-7)


மூன்றாம் ஆண்டு நினைவில்

எம் குலவிளக்கு



அமரர்

செல்லத்துரை பரமானந்தம்

( வீடியோ ஆனந்த் ஸ்ரூடியோ - மானிப்பாய் )

11.05.2019 அன்று இறைபதமடைந்த எம் தந்தையின்

மூன்றாம் ஆண்டு நினைவுகளை சுமந்து...

அன்பின் இலக்கணமாய் அறிவின் விருட்சமான தந்தையே
பற்றும் பாசமும் மீதுரப் பெற்று வாழ்ந்தீர்
ஆறுதல் பல கூறி அரவணைத்த அப்பா
மூவாண்டு கடந்தது என்று நினைக்கையில்
ஈர விழி காயவில்லை நினைவுகள் மறையவில்லை...

பண்பானவராய் மானியம்பதி மட்டுமன்றி பல பிரதேசம்
வண்ணமாய் புகைப்பட கலைஞனாய் வலம் வந்தீர்
புன் சிரிப்பும் நேரிய பேச்சும் ஒன்றிணைந்த போக்கும்
மழலைகள் போலிருந்தீர், அறிவுரைகள் பல கூறி வளர்த்தீர்
"டாடி" என அழைத்திட முத்தமிட்ட தந்தையே...

எம்மை விட்டு நீங்கள் பிரிந்து போனாலும்
நித்தம் நித்தம் நடமாடும் தன்மையை காண்கிறோம்
கண்ணை இமை காப்பது போல காத்தீர்களே
காலனும் வந்துமை கடத்தி மூவாண்டுகள் கடந்ததுவோ
காலங்கள் கடந்தாலும் எம் இதயங்கள் கனக்கின்றது...

குடும்பம் நலம் வாழ உழைத்திட்ட நாயகன்
சமூகத்திற்கு ஆற்றிய பணியும், அன்பு மனைவியும்
பிள்ளைகளும் பரிதவிக்க சிவபதம் பெற்றீரப்பா
மானிடனாய் மலர்ந்த நாளிலிருந்து மாண்புடன் வாழ்ந்தீர்
"ஆனந்தன்" எனும் நாமம் சிவப்பொருளில் பரமானந்தம் பெற்றதப்பா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(11301)



காரைநகர் கும்பநாயகி மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கான முகாமையாளரை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரல்

விதிமுறைகள்

- இந்து சமய ஆசார சீலராக இருத்தல் வேண்டும்.
- காரைநகர் பிரதேசத்தில் (தற்போது) வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- 18 வயதுக்கு மேற்பட்ட ஆணாக இருத்தல் வேண்டும்.
- ஆலய முகாமைத்துவத்தை நிர்மாணிக்கும் ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- உடல், உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- மாதாந்த வருமானம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- தங்களின் பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரத்தினை 2022.05.23 ஆம் திகதிக்கு முன்னராக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
- அனுப்ப வேண்டிய முகவரி :

பெறுநர் குழு, பிரதேச செயலகம், காரைநகர்.

(C-4294)



19 ஆம் ஆண்டு

நினைவுப் பிரார்த்தனை

வடகோவை இலுப்பையடிப் பிள்ளையார் துணை

கோப்பாய் - இணுவில்



| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 21.12.1918 | 08.05.2003 |

அமரர்

கந்தையா ஆறுமுகம்

(ஆசிரியர்)

இமைப்பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே – அப்பா

ஆ.[illegible]மூர்த்தி
[illegible], கோவில் வீதி, நல்லூர்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(11298)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே!

## பிரித்தானிய பாராளுமன்றில் ஆவணப்படம் வெளியீடு

**(லண்டன்)**

**1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதில் இருந்து, இலங்கையில் ஆட்சிக்கு வந்த இனவாத அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் வன்முறை சுழற்சிகள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றை சர்வதேச சமூகத்திற்கு காண்பிக்கும் வகையில், பிரித்தானியாவில் ஆவணப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.**

பல்வேறு ஆதாரங்களில் இருந்தும் புகைப்படங்கள் மற்றும் காணொளி பதிவுகளைப் பயன்படுத்தியும் உருவாக்கப்பட்ட ஆவணப்படம் கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி பிரித்தானிய பாராளுமன்றத்தில் திரையிடப்பட்டுள்ளது.

கொவிட் மற்றும் பாராளுமன்ற விதிமுறைகள் காரணமாக பார்வையாளர்கள் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டதுடன், அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் தமிழ் சமூகத் தலைவர்கள் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த ஆவணப்படத்தின் முக்கிய நோக்கம், இலங்கை தொடர்பான கொள்கை வகுப்பாளர்களுக்கும் அது தொடர்பிலான முடிவினை எடுப்பவர்களுக்கும், தமிழ் மக்களின் அவல நிலைமையினை தெரியப்படுத்துவதாக இருந்தது.

இலங்கை மீது பொருளாதார தடைகளையும், போர் குற்றவாளிகளை தமது நாட்டுக்குள் அனுமதிப்பதற்கான தடைகளையும் அமுல்படுத்த முடியும். மனித உரிமை பாதுகாவலர்களும், அமைப்புகளும், தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் உண்மை நிலைமையினை உறுதிப்படுத்துவதற்கு இவ் ஆவணப்படம் சிறந்த ஆதாரமாக அமையும் என்றும் கூறப்படுகிறது.

பிரித்தானியாவிடம் இருந்து இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து, இலங்கை அரசின், தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை ஆதாரங்களை வெளிப்படுத்தும் புகைப்படக் கண்காட்சி ஒன்று 2008ம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றத்தில் பிரித்தானிய தமிழர் பேரவையினரால் முதன் முதலாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் தொடர்ச்சியாக, 2012 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு புகைப்படக்கண்காட்சி மேலதிக தகவல்கள் மற்றும் புகைப்பட ஆதாரங்கள் திரட்டப்பட்டு பாராளுமன்றத்துக்குள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# திங்கட்கிழமை முதல் விவசாயிகளுக்கு நட்டஈடு

## சானக வகும்பர

(கொழும்பு)

விளைச்சல் வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கும் நடவடிக்கை நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்படும்.

உர விநியோகத்திற்கு விலை சூத்திரத்தை அறிமுகப்படுத்தவும், விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரத்தை விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சர் சானக வகும்பர சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கூட்டத்தொடரின் போது சிறுபோக விவசாய நடவடிக்கைகளுக்கு விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரம் வழங்கப்படுமா அல்லது இலவசமாக உரம் வழங்கப்படுமா, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு எப்போது வழங்கப்படும் என எதிர்க் கட்சி தலைவர் பிரேமதாஸ முன்வைத்த கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

சிறுபோக விவசாய நடவடிக்கைக்கு தேவையான சேதன பசளை மற்றும் சேதன திரவ உரம் ஆகியவற்றை விவசாயிகளுக்கு வழங்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், யூரியா உரத்தை இறக்குமதி செய்யும் பணிகளும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உலகில் தற்போது யூரியா உரம் உற்பத்தி மற்றும் பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவில் இருந்து 65 ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தை இறக்குமதி செய்ய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (நி)

# ஹர்த்தாலால் வெறிச்சோடியது நாடு





(யாழ்ப்பாணம்)



(பருத்தித்துறை)



(சாவகச்சேரி)



(மந்திகை)



(நெல்லியடி)



(வவுனியா)



(மன்னார்)



(கொழும்பு)

(படங்கள் : சிவசாந்தன், ரவிசாந், சுபேசன், கஜிந்தன், மகாலிங்கம், வசந்தரூபன், ஜோசப்நயன், தேவானந்தன், சதீஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரம் தொடர்

# அனைத்து பிரிவிலும் சைவப்பிரகாச அணி சம்பியன்




வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கரம் தொடரில் ஆண்கள் பெண்களிற்கான அனைத்து வயதுப் பிரிவுகளிலும் மூளாய் சைவப் பிரகாசா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

17 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மூளாய் சைவப் பிரகாசா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் பெற்றன.

17 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை மூளாய் சைவப் பிரகாசா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் பெற்றன.

20 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மூளாய் சைவப் பிரகாசா வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்டோரியா கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் பெற்றன.

20 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை மூளாய் சைவப் பிரகாசா வித்தியாலய அணியும் இரண்டாமிடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலய அணியும் பெற்றன. (6-90)

## ஆண்களுக்கான காற்பந்தாட்ட போட்டி

### அனைத்து வயதுப் பிரிவிலும் சென் பற்றிக்ஸ் சம்பியன்

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களிற்கான காற்பந்தாட்டத் தொடரில் அனைத்து வயதுப் பிரிவிலும் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 16 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில், சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் கெபேசன் மற்றும் திவாகர் ஆகியோர் ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 18 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

20 வயதிற்குட்பட்ட ஆண்களிற்கான இறுதியாட்டத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள் யெரோம் மற்றும் பேதுஷன் ஆகியோர் ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (6-90

# மரண அறிவித்தல்

## திருமதி கெங்காதரக் குருக்கள் விஜயலக்ஷ்மி (ஜெயா அம்மா)



**மலர்வு : 26.11.1952 உதிர்வு : 06.05.2022**

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் ஈவினை - புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதரக் குருக்கள் விஜயலக்ஷ்மி (ஜெயா அம்மா) நேற்று (06.05.2022) வெள்ளிக்கிழமை கற்பகனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ ராமையர் - காமாக்ஷ்சி அம்பாள் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் பிரம்மஸ்ரீ தியாகராஜ ஐயர் கெங்காதரக் குருக்களின் (பிரதமகுரு - ஈவினை கற்பக விநாயகர் ஆலயம் / குமரன் சோதிட ஆய்வகம், ஈவினை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ தியாகராஜா ஐயர் - பாலாம்பிகை அம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் பத்மநாத சர்மா (அமெரிக்கா), காலஞ்சென்ற ரங்கநாயகி நடேசன் (இந்தியா), காலஞ்சென்ற பால கிருஷ்ணன் (இந்தியா), சீதாலக்ஷ்மி பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற பத்மநாத சர்மா (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரன் சர்மா (விரிவிரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), பிரம்மஸ்ரீ கமலேஸ்வரன் சர்மா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம்), பிரம்மஸ்ரீ பாலேஸ்வரக் குருக்கள் (பிரதமகுரு - ஈவினை கற்பக விநாயகர் தேவஸ்தானம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரண்யா, ஸ்ரீவித்யா (ஆசிரியர்), மிதுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் தேன்மொழி, ராஜாராம், பூங்குழலி, நிலவெழிலி, மானக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும் வைத்தியக் கலாநிதி ஞானசேகர ஐயர் - ஞானலக்ஷ்மி தம்பதிகள் (ஞானம் சஞ்சிகை), காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர ஐயர் - லலிதாம்பாள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ சாமிநாத ஐயர் - நிர்மலா (வங்கி முகாமையாளர், திருகோணமலை) தம்பதிகளின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஈவினை கற்பக விநாயகர் தெற்கு வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (07.05.2022) சனிக்கிழமை இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாலை 4:00 மணிக்கு ஈவினை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(11305)

ஈவினை கற்பகப் பிள்ளையார் வீதி,
ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.

தகவல் :-
பிரம்மஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் (கணவர்) மற்றும் பிள்ளைகள்

077 711 0146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிற்கெதிரான மக்கள் போராட்டங்கள்




மன்னாரில்...


## மக்கள் விடுதலை முன்னணியினரால் விசுவமடுவில் ஆர்ப்பாட்டம்



## பாராளுமன்றிற்கு உள்ளே விவாதம் வெளியே ஆர்ப்பாட்டம்



## இது மட்டுமே எஞ்சியுள்ளது



## கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



ஹற்றனில்...




யாழ்ப்பாணத்தில்...





வவுனியா பல்கலைக்கழகத்தில் மனித சங்கிலிப் போராட்டம்



நுவரெலியாவில்...

வவுனியாவில்...



## விடுதலைப் புலிகளின் டொலர் எங்கே? வவுனியாவில் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்



மொனராகலையில்...



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 'மீள் புதுப்பிக்கத்தகு சக்தி திட்டம்'

## தீவகத்திற்கு இந்திய அதிகாரிகள் விஜயம்



(அராலி)

தீவகத்தில் ஆரம்பிக்கப் படவுள்ள மீள்புதுப்பிக்கத்தகு சக்தி திட்டத்தை யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

யாழ். தீவகப் பகுதிகளான நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு பகுதிகளில் ஏற்கனவே சீனாவுக்கு வழங்கப்பட இருந்த மீள்புதுப்பிக்கதகு சக்தி திட்டத்தினை இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இந்திய தூதரக அதிகாரிகள் அதனை பார்வையிட்டுள்ளனர்.

குறித்த விஜயத்தில் யாழ். மாவட்ட அரச அதிகாரிகள் மற்றும் தீவக பிரதேச செயலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6-104)

### நிதி நெருக்கடியால்

# பாதிப்பிற்குள்ளாகும் உள்ளூராட்சி மன்றங்கள்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி மன்றங்கள் தமது உத்தியோகத்தர்களின் சம்பளத்தை தமது வருமானத்திலேயே கொடுக்க வேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவன் தெரிவித்தார். சாவகச்சேரி நகரசபையில் அண்மையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நிதி நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கம் தள்ளாடி வருகிறது.

இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்கள் தமது வருமானத்தை வைத்தே தமது உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டிய நிலை வெகு விரைவில் ஏற்படும். எனவே சபை தமது வருமானத்தை நிலையாக வைத்திருப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6-30)

## மூதாட்டி மீது வாள்வெட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை வித்தகபுரம் பகுதியில் தனிமையில் இருந்த மூதாட்டி மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த மூதாட்டியிடம் கொள்ளையிடுவதற்காக சென்றிருந்த சிலர், தாக்குதலை மேற்கொண்டு தப்பிச்சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மூதாட்டி தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# அரசிற்கு ஆதரவளித்து மக்களுக்கு துரோகம் செய்கின்றனர்

## செல்வம் எம்.பி. தெரிவிப்பு

(நெளுக்குளம்)

மக்கள் இன்று தமது வாழ்வியலை கொண்டு செல்ல முடியாமல் அன்றாடம் வீதியில் நின்று அரசாங்கத்தை வீட்டிற்குச் செல்லுமாறு வலியுறுத்தும் நிலையில் 148 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்து மக்களுக்கு துரோகம் செய்கின்றனர் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த நாட்டை வளமிக்க பூமியாக பாதுகாத்துக்கொள்ள மக்கள் தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டு வருவதுடன் ஊழல் மோசடி நிறைந்த ஆட்சியாளர்களை வீட்டுக்குச் செல்லுமாறும் வலியுறுத்துகின்றனர்.

இந் நிலையில் பாரளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மக்கள் வாக்குகளை பெற்ற மக்கள் பிரதிநிதிகள் பிரதி சபாநாயகரை தெரிவு செய்வதில், தமது உண்மை முகத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

மக்கள் எப்பாடுபட்டாலும் அதைப்பற்றி சிந்திக்காது அரசாங்கத்தை பாதுகாத்தே தீருவோம் என 148 பாராளுமன்ற உறுப்பினர்களும் கங்கணம் கட்டி நிற்பது வாக்களித்த மக்களுக்கு செய்யும் பெரும் துரோகமாகும்.

இந்த பாராளுமன்றத்தில் 65 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே மக்களுக்கான பிரதிநிதிகள் என்பதனை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6-299)



பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு நேற்று முன்தினம் ஒரு தொகுதி பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்- சுபேசன்)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும், அன்றையதினம் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என மேற்படி ஆலய ஆதீன கர்த்தாக்கள் அறிவித்துள்ளனர். (நி-6-18)

(குப்பிழான்)

இருபாலை வேளாதோப்பு ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ரம்பமாகவுள்ளது. தொடர்ந்தும் பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பரத் திரு விழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், இடம்பெறும் என மேற்படி ஆலயத் தர்மகர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (நி-6-18)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி புனித லிபோரியார் ஆலய இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை சாவகச்சேரி புனித லிபோரியார் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (நி-6-18)

## நூல் வெளியீடு

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா எழுதிய 'யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியில் இந்திய ஆசிரியர்களின் பங்களிப்பு' எனும் நூல் வெளியீடானது நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

## கர்நாடக தகவல் தொழில்நுட்ப அமைச்சரை சந்தித்த வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா



(அராலி)

இந்தியா சென்றுள்ள வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கர்நாடக மாநில தொழில்நுட்பம், உயர் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப டாக்டர் சி.என். அஷ்வத் நாராயணனை நேற்று முன் தினம் சந்தித்தார்.

வடமாகாணத்தை மையமாகக் கொண்டு இந்திய தகவல் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை இலங்கைக்கு கொண்டு வருவது தொடர்பிலும் வடமாகாணத்தில் தற்போதுள்ள கல்வி முறைகளை வலுப்படுத்துதல் மற்றும் சீரமைத்தல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (நி-6-104)



1986 மே 6 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினம், அவருடன் உயிர் நீத்த போராளிகள் பொதுமக்களுக்கு நேற்று கோண்டாவில் அன்னங்கை ஒழுங்கையில் யாழ். மாவட்ட ரெலோ கட்சியினரால் நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது. (படம்- ரவிசாந், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் காலிமுகத்திடல் போராட்டம் படகுகளுடன் வந்து ஆதரவு தெரிவித்த மீனவர்கள்



(கொழும்பு)


ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டம் நேற்றுடன் 28 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு நாளாந்தம் பல்வேறு தரப்பினராலும் ஆதரவு வழங்கப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் மீனவ சங்கப்பிரதிநிதிகள் படகுடன் வந்து ஆதரவு தெரிவித்து அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



## கொட்டும் மழைக்கு மத்தியில் போராட்டம் 'ஹொரு கோ கம' கிராமம் உதயம்






(கொழும்பு)

பாராளுமன்ற பகுதியில் 'ஹொரு கோ கம' என்ற பெயரில் புதிய கிராமம் ஒன்று அமைக் கப்பட்டு எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

பத்தரமுல்லை - பொல்துவ சந்திக்கு அருகில் நேற்று முன் தினம் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை முன்னெடுத்த அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம் மேற்கொண்டனர்.



இதன்பின்னர் அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டதுடன் மாணவர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் இரவிரவாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், கோட்டா கோ கம, மைனா கோ கம போன்று ஹொரு கோ கம என்ற கிராமம் ஒன்றை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் வீடு செல்லுமாறு வலியுத்தியே இந்தப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


### பெயர் மாற்றம்

அல்லைப்பிட்டி 2 ஆம்வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட டெய்சி மரியஸ்ரெலா ஆகிய எனது பெயரை இன்றிலிருந்து டெய்சி மேரிஸ்ரெலா என மாற்றம் செய்து இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
(1287) து.டெய்சி மேரிஸ்ரெலா


## 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு 4 ஆம் கட்ட தடுப்பூசி

(கொழும்பு)

நாட்டில் 60 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு நான்காவது தடுப்பூசி வழங்க தீர்மானிக்கப்பட் டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கான நான்காவது கொவிட் தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (நி)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



### ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட இருப்பதால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளிய முறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சிகள்
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வுப் பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் : 07.05.2022 சனிக்கிழமை தொடக்கம் 13.05.2022 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

பயிற்சிகளை வழங்குபவர்கள் : துணைப்பேராசிரியர் அருள்நிதி த. நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா

வாழ்க வளமுடன்!

(1133)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
021 222 2772, 077 736 8745, 071 440 32[illegible]



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 30 சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: சாரதி<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12600 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>கி.பா: 13 சூரி 10 செவ் 9 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: LLB இறுதியாண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு:தகுந்த அரச , தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/12626 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம் : உத்திரட்டாதி 1<br>கி.பா: சூரி 4 செவ் 12 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: MBBS Doctor உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12602 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:சித்த வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12627 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: civil Engineer (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரிமட்டும்<br>தொ.இ: B/12603 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:IT<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ:G/12629 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா:7 ½ சூரி 5 செவ் 2 இல்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்:civil Engineering TO<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12604 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: சூரி 11 செவ் 7 இல்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில் :BSc,Msc Lecturer(அரச)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/12632 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 39

# உன்னை நீ அறிந்தால்



ஒரு பணக்காரனுக்கு மிகவும் அழகான மகள் ஒருத்தி இருந்தாள்!

வளர்ந்தவுடன் அவளுக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்து ஊரில் உள்ள தகுதியான இளைஞர்களுக்கு ஒரு போட்டி வைப்பதாகவும், அதில் வெற்றி பெறும் இளைஞனுக்கு தன் மகளை மணமுடித்து வைப்பதாகவும் அறிவித்தார்.!

போட்டி நாள் அன்று, ஊரிலுள்ள வலுவான, திறமையான இளைஞர்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். சிலர், கையில் பேப்பரும் பேனாவும்... கத்தியும், வீச்சரிவாள், சிலர் துப்பாக்கியுடன்... இப்படியாக! அதில் நின்றார்கள்.

அவர்களை, தன் மிகப்பெரிய நீச்சல் குளத்துக்கு அழைத்துச் சென்று "இந்த நீச்சல் குளத்தில், இந்த முனையிலிருந்து, எதிர் முனைக்கு முதலில் யாரால் நீந்தி கடக்க முடிகிறதோ, அவனுக்கு என் மகளை திருமணம் செய்து தருவேன்!" என அவர் தெரிவித்தார்.

அவர் சொல்லி முடித்த வினாடியே, கடகடவென அனைவரும் நீச்சலுக்கு தயாராக, வேகமாக உடைகளை கழற்ற ஆரம்பித்த பொழுது...

"அது மட்டுமில்லை... கூடவே ஒரு 15 மில்லியன் டொலர்கள் பணமும், ஒரு தனி மாளிகை வீடும் கூட தருவேன்.. அப்பொழுதுதானே, என் அருமை மகள் தன் மணவாழ்வை சுகமாக ஆரம்பிக்க முடியும்!"

"சரி... உங்கள் எல்லோருக்கும் நல்வாழ்த்துகள்! என் மருமகனை, நான் நீச்சல் குளத்தின் மறு கரையில் சந்திக்கிறேன்" என்றவாறு, அங்கிருந்து நடக்க ஆரம்பித்தார்.!

சொல்லி முடித்தவுடன்... மொத்த இளைஞர்களும், இன்னமும் வேகமாக தண்ணீரில் இறங்க முற்பட்ட பொழுது... அந்தப் பணக்காரனின் ஹெலிகாப்டர், அந்த நீச்சல் குளத்துக்கு நேர் மேலே பறந்து வந்து, டசின் கணக்கில் முதலைகளை, அந்தக் குளத்தில் இறக்கிவிட்டுச் சென்றது!

அவ்வளவுதான்! அத்தனை பேரும், மரண பயத்தில் உடனே பின்வாங்கி ஏமாற்றத்துடன் மீண்டும் தங்கள் உடைகளை மாட்டிக்கொள்ள ஆரம்பித்தனர்!

"இதென்ன பைத்தியக்காரத் தனமாக இருக்கிறது? யாரால் இது முடியும்? பார்க்கலாம்! எவன் இதில் ஜெயிக்கிறான் என்று?" "நிச்சயமா எவனாலும், முடியாது!" என்று சத்தமாய் பேச ஆரம்பித்தனர்!

அப்பொழுது.... திடீரென்று, ஒருவன் குளத்தில் குதிக்கும் சத்தம்!

அத்தனை பெரும் மூச்சுக்கூட விட மறந்து... அதிசயத்தில், அவனையே, கண்ணிமைக் காமல் கவனிக்க ஆரம்பித்தனர்!

அந்த இளைஞன்... மிகவும் லாவகமாக, அத்தனை முதலைகளிலுமிருந்து விலகி விலகி, வேகமாய் நீந்தி, அடுத்த கரையில் ஏறி, வெடவெடவென நின்றான்!

பணக்காரனால், தன் கண்களை நம்பமுடியவில்லை!

"பிரமாதம்.! நான் தருவதாக சொன்ன விஷயங்களுக்கும் மேல... உனக்கு என்ன வேணுமோ கேளு!

நான் தாறேன்! எதுவாக இருந்தாலும்!"

அந்த இளைஞனோ, இன்னமும் நடுக்கத்திலிருந்து மீளவில்லை!

வாய் தந்தியடித்தது, மிரட்சியில்!

கண்கள் அரண்டு போய் இருந்தது!

பின், ஒருவித வெறியுடன்... "அதெல்லாம் இருக்கட்டும்...

என்னை, இந்த குளத்தில் தள்ளிவிட்டவனை மட்டும், யாருன்னு எனக்கு காட்டுங்கள்!!!

நீதி-1: முதலைகள் இருக்கும் நீரில் தள்ளிவிடப்படும் வரை... உன் திறமை என்னவென்று, உனக்கே தெரியாது! (அந்த ரப்பர் முதலைகள் போன்றே, பிரச்சினைகளும் போலிதான்... என்பதும் புரியவரும்!!!)

நீதி-2 : உன்னை, முதலைகளுக்கு காவு குடுக்க நினைத்தவர்கள்...

உண்மையில், உன் உள்ளிருந்த திறமையை வெளிக்கொண்டு வந்து, உன் கனவு எதிர்காலத்தை அடைய உதவியவர்களே! (நன்றி காட்டாவிட்டாலும், வன்மம் வேண்டாமே!)

நீதி-3 : சிலநேரம், மிகவும் மோசமான தருணங்களை கடக்கும் பொழுதுதான், நம் உள்ளிருக்கும் நிஜத் திறமை வெளிப்படும்!

நீதி-4 : சிலருக்கு... இம்மாதிரி, அசாத்திய பிரச்சினைகளில் வலுக்கட்டாயமாக தள்ளப்படும் பொழுது மட்டுமே, அவர்களால் வாழ்வின் உயர் இலக்கை அடைய முடிகிறது!

(சில தொலைநோக்குப் பெற்றோருக்கு, இந்த சூட்சுமம் தெரியும்! பெற்றோரை நம்புங்கள்!)

**அன்பு வாசகர்களே!**

முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# உலக மக்

# ரஷ்யா –

# முடிவுக்



## ஈராக்கில் புழுதிப் புயல்
## ஆயிரக்கணக்கான மக்கள் பாதிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் நேற்று முன் தினம் கடும் புழுதி புயல் ஒன்று உருவாகி உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் வெப்ப நிலை மாற்றங்கள் காரண மாக இது ஏற்பட்டிருக்க லாம் எனக் குறிப்பிடப்படுகி றது.

அதிலும் மத்திய கிழக்கு நாடுகளில் வெப்பநிலை அதி கரிப்பு வீதம் என்பது ஏனைய நாடுகளை விட மோசமானதாக உள்ளது. இதனால் புழுதி புயல் உருவாகுவதும் அங்கு அதிகரித்து வருகிறது.

தலைநகர் பாக்தாத் உட்பட 18 நகரங்களில் தாக்கிய இந்தப் புழுதி புயலினால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வான்வெளி முழுதும் காற்றுடன் கலந்து புழுதி பறந்ததால் போக்கு வரத்து தடைப்பட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்களின் நலனுக்காக உக்ரைன் போர் முடிவுக்கு வர வேண்டும்

## ஐ.நா. வலியுறுத்து

(ஜெனிவா)

**உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு அதன் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை மீறுவதாகும். உக்ரைன், ரஷ்யா மக்களுக்கு மட்டுமல்லாமல் உலக மக்களின் நலனுக்காக போர் முடிவுக்கு வர வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டராஸ் வலியுத்தினார்.**

சீனா, அமெரிக்கா, அயர்லாந்து, பிரான்ஸ் மற்றும் மெக்சிகோ உள்ளிட்ட பெரும்பாலான பாதுகாப்பு சபை உறுப்பினர்கள் பல மாதங்களாக நீடித்து வரும் போருக்கு முடிவு கட்ட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையும், பல்வேறு நாடுகளும் உக்ரைனில் ரஷ்யாவின் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். (நி)

## ரஷ்யப் பணக்காரர்களுக்கு புகலிடம் வழங்கும் டுபாய்

(டுபாய்)

உக்ரைனில் நடந்த போரில் மேற்கத்தேய பொருளாதாரத் தடைகளின் தாக்கத்திலிரு ந்து தப்பிச் செல்லும் பணக் கார ரஷ்யர்களுக்கு டுபாய் புகலிடமாக உருவெடுத்துள்ளது.

ரஷ்ய கோடீஸ்வரர்கள் மற்றும் தொழில்முனை வோர் முன்னோடியில்லாத எண்ணிக்கையில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு வந்துள் ளனர் என்று வணிகத் தலை வர்கள் தெரிவித்தனர்.

2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் ரஷ்யர்களால் டுபாயில் சொத்து வாங்குதல் 67 சதவீதம் அதிகரித்துள்ளது என்று ஒரு அறிக்கை கூறுகிறது.

ஐக்கிய அரபு அமீரகம் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கவில்லை. அல்லது உக்ரைன் மீதான அதன் ஆக்கிரமிப்பை விமர்சிக்கவில்லை.

பல மேற்கத்தேய நாடுகள் அவர்களைக் கட்டுப்படுத்தியுள்ள நிலையில், அனுமதி பெறாத ரஷ்யர்களுக்கும் டுபாய் விசா வழங்குகிறது.

சரியான புள்ளிவிபரங்கள் கிடைக்கவில்லை என்றாலும். கடந்த இரண்டு மாதங்களில் நூறாயிரக்கணக்கான மக்கள் ரஷ்யாவை விட்டு வெளியேறியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு ரஷ்ய பொருளாதார நிபுணர் கூறுகையில்,

'போர் தொடங்கிய முதல் 10 நாட்களில் 200.000 ரஷ்யர்கள் வெளியேறிவிட்டனர்' எனத் தெரிவித்தார். (நி)

## ரஷ்யாவின் பீரங்கி தாக்குதலில் 600 உக்ரைனிய வீரர்கள் பலி



(மொஸ்கோ)

ரஷ்யப் படைகள் நடத்திய பீரங்கி தாக்குதல்களில் உக்ரைனில் ஒரே இரவில் 600 உக்ரைன் வீரர்கள் உயிரிழந்துள்ளதாக ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது.

உக்ரைன்-ரஷ்யா போர் நடவடிக்கை இரு மாதங்களை தாண்டிய நிலையிலும் தொடர்கிறது.

இந் நிலையில் உக்ரைன் மீது தாக்குதலை மேற்கொண்டு வரும் ரஷ்யாவுக்கு எதிராக உலக நாடுகள் கடும் பொருளாதாரத் தடை மற்றும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

இவ்வாறாக உலக நாடுகள் விதித்துள்ள தடைகள் தொடரும் நிலையிலும் ரஷ்யா தனது போர் நடவடிக்கையை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தண்ணீரின்றி தவிக்கும் கலிபோர்னியா மக்கள்

(கலிபோர்னியா)

அமெரிக்காவின் முக்கிய தண்ணீர் விநியோகம் செய்யும் மாகாணமான கலிபோர்னியாவில் தண்ணீர்ப் பற்றாக்குறை தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வழமையான பாவனை அளவை விட குறைவாக தண்ணீரைப் பயன்படுத்துமாறும், அவ்வாறு இல்லாவிடில் விரைவில் தண்ணீர்ப் பற்றாக் குறையை எதிர்கொள்ள வேண்டி வரும் என மாகாண அமைச்சு அறிவித்துள்ளது.

வரலாற்றில் இதுவரை இவ்வாறான நீர்ப் பற்றாக்குறை பதிவாகி இருக்கவில்லை.


கலிபோர்னியாவின் பிரதான நீர் மூலமான சியாரா மற்றும் ராக்கி மலைத் தொடர்களில் பனி மிக வேகமாகக் குறைந்துள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அறியப்பட்டுள்ளது.

ஏற்கனவே சுற்றுச்சூழல் அமைப்புகள், அதிகரித்து வரும் காலநிலை மாற்றம் காரணமாக இவ்வாறான வரட்சிகளை எதிர்வு கூறி இருந்த நிலையில் தற்போது இந்த நிலை எதிர்பார்த்த அளவை விட வேகமாக அதிகரித்து வருகின்றது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளை தகர்த்த மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்குதல்

## பத்தரமுல்லையில் பதற்றம்





(கொழும்பு)

பத்தரமுல்லை, பொல்துவ சந்தியை அண்மித்த பாராளுமன்ற நுழைவு வீதியில் திரண்டிருந்த போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற நுழைவுப் பகுதியில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் வீதித் தடைகள் மாணவர்களால் அகற்றப்பட்டதை தொடர்ந்தே போராட்டக்காரர்களை கலைப்பதற்காக இவ்வாறு கண்ணீர்ப்புகை தாக்குதல் மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வரும் போதும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் தொடர்ந்தும் தமது போராட்டத்தை முன்னெடுத்தனர். (நி)



# பதுக்கிய பணங்களை திறைசேரியிடம் ஒப்படையுங்கள்

## ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

**(கொழும்பு)**


**ராஜபக்ஷக்களால் பதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பணம், மீள திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதற்கான முடிவை ஜனாதிபதி எடுக்க வேண்டும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக மக்கள் மத்தியில் நாளாந்தம் எதிர்ப்பலை அதிகரித்து வருகின்றது.

எனவே, மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி முழுமையாக ஏற்று செயற்பட வேண்டும்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் பணத்தை கொள்ளையடித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.



அந்தப் பணத்தை மீளப் பெற்று, திறைசேரிக்கு வழங்குமாறு கோருகின்றோம். இந்த விடயத்தில் அண்ணன், தம்பி, மகன் என பார்க்க வேண்டாம், நாடு குறித்து சிந்தித்து இந்த முடிவை எடுங்கள்." என அவர் தெரிவித்தார். (நி)

# மண்ணெண்ணை விநியோகத்திலும் கட்டுப்பாடு

(கொழும்பு)

பெற்றோல் விநியோகத்தில் மட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மண்ணெண்ணெய் விநியோகத்துக்கும் மட்டுப்பாடு விதிப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, நிரப்பு நிலையங்களில், நாளொன்றில் நபர் ஒருவருக்கு 5 லீற்றர் மண்ணெண்ணெய் மாத்திரமே வழங்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

உடன் அமுலாகும் வகையில் இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதி, பிரதமரை விமர்சிக்கும் ஓவியங்களை வரைந்த இளைஞர்கள்



(கொழும்ப)

ராஜகிரிய மேம்பாலத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் உருவங்களை போராட்டகாரர்கள் ஓவியங்களாக வரைந்துள்ளனர்.

அதன் போது பொலிஸார் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரை விமர்சிக்கும் வகையில் போராட்டகாரர்கள் கேலிச் சித்திரங்களை போல் இந்த ஓவியங்களை வரைந்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர், இளைஞர், யுவதிகள் வீதிகளில் உள்ள சுவர்களில் அழகான ஓவியங்களை வரைந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருந்தனர்.

இதனை ஜனாதிபதி உட்பட ஆளும் கட்சியினர் பெருமிதமாக பேசியதுடன் இளைஞர்களை பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. (நி)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்களுக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி தெரிவிப்பு

(மன்னார்)

நீதிக்காக போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் போராட்டத்திற்கும் கோரிக்கைகளுக்கும் இலங்கை அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் நேற்று மன்னாரில் உள்ள அலுவலகத்தில் ஊடக சந்திப்பு இடம் பெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் [illegible]யில், கடந்த 12 ஆண்டுக[illegible] மேலாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுத்துவரும் போராட்டம் இன்றும் எவ்வித நியாயமான நீதியும் இன்றி தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது.

நீதிக்காகப் போராடிய 115 காணாமல் ஆக்கப்பட்டவர்களது பெற்றோர் இறந்துள்ள[illegible] அழிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

தற்போது பொருளாதார நெருக்கடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்த வண்ணமே உள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நியாயமான நீதி கிடைக்கும் வரை நீதிக்கான பயணத்தில் சிவில் சமூக அமைப்புக்கள் அரசியல்வாதிகள் பொதுமக்கள் தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார். (நி-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்தளம் போட்டது மகிந்த தான் பகிரங்கபடுத்திய நாலக கொடஹேவா

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மகிந்த ராஜபக்ஷ நிதியமைச்சராக பதவி வகித்த காலத்திலேயே அடித்தளம் போடப்பட்டதாக ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த காலத்தில் தன்னிச்சையாக செயற்பட்ட விதமும் இதற்கு காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

கலாநிதி பீ.பி. ஜெயசுந்தரவின் வரியை இரத்துச் செய்யும் யோசனை எம்மை நெருக்கடிக்கு உள்ளாகும் என நான் ஜனாதிபதியிடம் கூறினேன்.

அத்துடன் ஒரு ஆண்டுக்குள் இரசாயன பசளை பாவனையில் இருந்து சேதனப் பசளை பயன்பாட்டுக்கு செல்லலாம் என்று வியத்கம கூறவில்லை.

10 ஆண்டுகளுக்குள் சேதனப் பசளை பயன்பாட்டுக்கு செல்லலாம் என்பதை சௌபாக்கிய நோக்கு கொள்கை அறிக்கையில் நாங்கள் தெளிவாக கூறியுள்ளோம்.

மேலும் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு வரலாறு உள்ளது. இது 2009 ஆம் ஆண்டு போருக்கு பின்னர் நாம் குறுகிய கால கடன் அடிப்படையில் வணிக ரீதியாக கடனைப் பெற்றோம். வருடம் தோறும் இரண்டு பில்லியன் டொலர்களை கடனாகப் பெற்றோம்.

கடனைப் பெற்ற எமக்கு கடனைத் திரும்ப செலுத்துவதற்காக பணத்தை சம்பாதிக்க உரிய வேலைத்திட்டங்கள் இருக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## தேசிய மக்கள் சக்தி

# பாராளுமன்றை புறக்கணித்து ஹர்த்தாலுக்கு ஆதரவு


(கொழும்பு)

நிர்வாக முடக்கல் போராட்டத்துக்கு (ஹர்த்தாலுக்கு) ஆதரவாக தேசிய மக்கள் சக்தி நேற்று பாராளுமன்றத்தை புறக்கணித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய டுவிட்டரில் இதனை தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி பொது மக்களுடன் ஐக்கியமாக நிற்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராஜாங்க அமைச்சர் குணபால ரத்னசேகர பதவி விலகினார்



(கொழும்பு)


கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குணபாலரத்னசேகர தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளதாக பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். (நி)

# அரசியல்வாதிகளுக்கு இது கடைசி வாய்ப்பு

## எச்சரிக்கும் சனத் ஜெயசூரிய

(கொழும்பு)

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காணப்படாவிட்டால், அராஜகம் தலைதூக்கும் அபாயம் இருப்பதாக இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூரிய நேற்று எச்சரிக்கை விடுத்தார்.



அரசாங்கமும் அரசியல்வாதிகளும் மக்களுக்குப் பொருத்தமான தீர்வைத் தயாரிப்பதற்கு இதுவே கடைசி வாய்ப்பாக இருக்கும்.

பாராளுமன்ற முறை மீது மக்கள் முழுமையாக நம்பிக்கை இழந்தால், அராஜகம் தலைதூக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

மக்கள் தங்கள் ஜனநாயக அபிலாஷைகளை அடைய சர்வதேச சமூகம் உதவ வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

# ஐரோப்பிய ஒன்றியம் 200, 000 யூரோ நிதி உதவி

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியம் மனிதாபிமான நிதியாக 200,000 யூரோக்களை (74 மில்லியன் இலங்கை ரூபாய்) இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் உள்ள 80,000 குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிகளுக்காக இந்த நிதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 2.3 மில்லியன் பெறுமதியான மருந்துகளை வழங்கும் பங்களாதேஷ்

(கொழும்பு)

இலங்கையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், 2.3 மில்லியன் அமெ.டொலர் பெறுமதியான அத்தியூாவசிய மருந்துகளை வழங்க பங்களாதேஷ் முன்வந்துள்ளது.

இலங்கைக்கு 2.3 மில்லியன் அமெரிக்க டொலர் (830 மில்லியன் ரூபா) பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை நன்கொடையாக வழங்குவதை பங்களாதேஷ் உறுதி செய்துள்ளது.

சுமார் 56 வகையான அத்தியாவசிய மருந்துகள் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்படவுள்ளதாக் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

07.05.2022
சித்திரை 24, சனிக்கிழமை
ஷஷ்டி பிற்பகல் 12.36 மணிவரை

புனர் பூசம் முற்பகல் 10.16 மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம்

வளவன்

**மேஷம்:** சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சிந்தனையாற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்ற அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவலாம், காரிய அனுகூலமுண்டு, உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

**மகரம்:** எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்:** உடல் நலனில் கொஞ்சம் அக்கறை தேவை, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், வழிபாடு குதூகலம் தரும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணமொன்று ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், கடன் பிரச்சினைகளை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், கௌரவமான நாள்.

**மிதுனம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும்.

**கன்னி:** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், பிரயாண பயமுண்டு.

**மீனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

தவறான வழியில் சம்பாதித்தால் தவறான வழியில் செலவழியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## சரியாகக் கேட்டான்!



(நேற்றைய தொடர்ச்சி)

பாம்பு கடித்து உன் மனைவியும் இறந்து போனாள். இது அகால மரணம். நீ இப்போதே உன் தந்தையின் உடலைத் தகனம் செய். உடனே உன் மனைவி உயிர் பெற்று எழுந்து வருவாள் என்றார்.

வீரசிம்மன் சற்று யோசித்து விட்டு அவரை வணங்கி "சுவாமி! தங்களுக்கு அரிய சக்திகள் இருக்கின்றன. அவற்றைக் கொண்டு உங்களால் இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாதா?" என்று கேட்டான்.

மகானும் புன்னகை புரிந்தவாறே "என் தவ சக்தி முழுவதையும் நான் பயன்படுத்தினால் ஒரே ஒரு உடலுக்குத்தான் உயிரளிக்க முடியும். உன் தந்தை, உன் மனைவி ஆகிய இருவரையும் உயிர்ப்பிக்க முடியாது. இவர்களில் ஒருவரை உயிர் பெற்று வரச் செய்கிறேன். இவர்களில் யாருக்கு உயிர் கொடுக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாய்?" என்று கேட்டார். வீரசிம்மனும் சற்று யோசித்து "என் தந்தையை உயிர் பெற்று வரச் செய்யுங்கள்" எனக் கூறினான். அது கேட்டு அந்த மகான் "நீ மிகச் சிறந்த அறிவாளி.

ஆழ்ந்து யோசித்து இப்படிக் கேட்டதால் ஒரே சமயத்தில் நீ மூன்று பேர்களும் உயிர் பெற்று வரும்படி செய்து விட்டாய்" எனக் கூறி அவனை ஆசீர்வதித்து அவன் வேண்டியபடி செய்து விட்டுச் சென்றார்.

வேதாளம் இக்கதையைக் கூறி "மன்னனே! அந்த மகான் கூறியது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இல்லையா? அவர் தன் அரிய சக்திகளை எல்லாம் பயன்படுத்தினாலும் ஒருவரைத்தான் உயிர்ப்பிக்க முடியும் என்றாரே.

ஆனால் வீரசிம்மன் தன் தந்தையை உயிர்ப்பித்துத் தரும்படி அவரிடம் கோரிய போது அவர் அவனை மிகச் சிறந்த அறிவாளி எனக் கூறி ஆழ்ந்து யோசித்து அவன் கேட்டதால் மூன்று உயிர்கள் பிழைத்து வரச் செய்தான் என்று கூறினாரே! இது ஒன்றுக்கொன்று முரண்பட்டதுதானே.

மேலும் வீரசிம்மன் மட்டும் மகான் கூறியபடி அவனது தந்தையின் உடலை எரித்திருந்தாலே அவன் மனைவி திலோத்தமை உயிர் பெற்று வந்திருப்பாளே.

தன் மனைவியை முதலில் உயிர்ப்பிக்க வேண்டும் எனக் கேட்காமல் வீரசிம்மன் தன் கிழத் தந்தை உயிர் பெற்று வர வேண்டும் என்று கேட்டதும் சரியா? மேலும் இறந்தவர்கள் வீரசிம்மனின் தந்தையும் மனைவியும் ஆக இருவர் தாமே.

ஆனால் மகானோ மூவர் பிழைத்தனர் என எப்படிக் கூறினார்? இக் கேள்விகளுக்கு எல்லாம் விடை தெரிந்தும் நீ பதில் கூறாவிட்டால் உன் தலை வெடித்துச் சுக்கு நூறாகி விடும்" என்றது.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




சுக்கிரீவனிடம் "அஞ்சற்க; வாலியைக் கொன்று, உன் மனைவியை உன்னிடம் சேர்ப்பேன்; ஆட்சியும் உன் கைக்கு வரும் மாட்சியைப் பெறுவாய்" என்று உறுதி கூறினான் இராமன். அனுமன் இதைக் கேட்டு அகம் மிக மகிழ்ந்தான்.

எனினும், சுக்கிரீவனுக்கு ஓர் ஐயம் எழுந்தது; அடிபட்ட நாகம் அவன்; பிடிபட்டுத் தப்பியவன்; இடியொத்த அண்ணன் வலியை நன்கு அறிந்தவன்; "மேரு மலையை எதிர்க்கும் ஆற்றல் பெருங் காற்றுக்கு ஏது?" என்று ஐயப்பட்டான்; பாற்கடலைக் கடைந்த பராக்கிரமம் நிறைந்தவன் வாலி, அண்டத்தை அளாவும் வேகம் கொண்டவன்; அத்தகையவனை இராமன் எதிர்க்க முடியும் என்பதில் அவனுக்கு உறுதி ஏற்படவில்லை; அனுமனைத் தனியே அழைத்து, இராமன் ஆற்றலுக்கு எடுத்துக் காட்டுக் கேட்டான்.

அனுமன் அவன் ஐயத்தை அறிந்து, தெளிவுபடுத்தினான்; "வாலியைக் கொல்லும் ஆற்றல் இராமனிடம் உண்டு" என்று கூறினான்; வேண்டுமானால் அவன் ஆற்றலை அறிய வாய்ப்பினைப் பெறலாம் என்றும் அறிவித்தான்; மராமரங்கள் ஏழையும் ஒரே அம்பால் துளைக்கும் வல்லமை அவனிடம் உண்டு என்பதைக் கூறித் தெளிவுபடுத்தினான். சுக்கிரீவனும் "அதுவே தக்கவழி என்று சிந்தித்தவனாய் மகிழ்ச்சி கொண்டான்; இராமனை அணுகித் தன் கருத்தை அடக்கமாய் அறிவித்தான்.

"உன்னுடைய வில்லின் ஆற்றலையும் அம்பின் வேகத்தையும் உன் விரத்தையும் எம் வானரர் காண விழைகின்றனர்; இந்த மராமரம் ஏழனுள் ஒன்றைத் துளைத்துக் காட்டினால் எங்களுக்கு ஊக்கமாக இருக்கும்" என்று தெரிவித்தான்.

இராமன் அவன் ஏக்கத்தை அறிந்து செயற்பட்டான் "ஒரு மரம் என்ன ஏழு மரமும் என் ஒரே அம்பால் துளைபடும்" என்று கூறினான். மராமரங்கள் ஏழும் ஒன்றன்பின் ஒன்றாய் வரிசையாய் நின்று கொண்டிருந்தன. இராமன் வில்லை வளைத்து, நாண் ஏற்றி அம்பு தொடுத்தான் அவ் ஒலி ஏழ் உலகும் கேட்டது; அனைவரும் நடுங்கினர்; அவ் அம்பு ஏழு மராமரங்களையும் துளைத்து முடித்து அவனிடம் வந்து சேர்ந்தது; 'ஏழு' என்ற எண்ணிக்கை உடைய பொருட்களும் உயிர்களும் "அது தம்மையும் தாக்குமோ?" என்று அஞ்சின.

இராமன் வில்லாற்றலைக் கண்டு சுக்கிரீவன் சொல்லொணா மகிழ்வும் நம்பிக்கையும் கொண்டான்; அதற்கு மேல் அவர்கள் சிறிது தூரம் நடந்து சென்றனர்; வழியில் துந்துபி என்ற அசுரனது எலும்புக்கூடு மலை போல் படிந்து கிடந்தது; அதனைக் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. வற்றி உலர்ந்த அந்த எலும்புக்கூடு வழி மறித்தது. இராமன் தன் தம்பியிடம் அதை அகற்றுமாறு குறிப்புக் காட்டினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாளி என்பவன் யார் தெரியுமா? தேவைப்படும் போது தன் முடிவை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவன் தான்.

– டாக்டர் ஜான்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்பார்ந்த தமிழ் மக்களே! நெல்லைச் சேமித்து வையுங்கள்

அன்பார்ந்த தமிழ் மக்களே! நாளுக்கு நாள் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாகி வருகிறது.

அதேநேரம் ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டமும் பரவலடைந்துள்ளது.

இதில் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக வங்கிகளும் இயங்காத நிலைமை ஏற்பட்டுள்ளமை நாட்டின் ஸ்திரத்தன்மையைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், ஆட்சியாளர்களும் பதவியை விட்டுப் போவதாகத் தெரியவில்லை.

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தாலும் அதில் வெற்றி பெறுவது கடினம் என்ற முடிவை, உபசபாநாயகரைத் தெரிவு செய்யும்போது பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன.

அதேநேரம் சட்டத்தின் ஊடாகவும் ஆட்சியாளர்களின் பதவிகளைப் பறிக்க முடியவில்லை.

இந்நிலையில் போராட்டம் நடத்துகின்ற மக்களின் அடுத்த கட்ட நகர்வு பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை நோக்கியதாகவே இருக்கும்.

இதுஒருபுறமிருக்க, போராட்டம் நடத்துகின்ற பொதுமக்கள் மீதும் பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் தாக்குதல் நடத்துவதற்குப் பொலிஸார் தயாராகி வருவதையும் உணர முடிகிறது.

ஆம், பாராளுமன்ற வளாகத்தை நோக்கி பேரணி நடத்திய பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியமை நடைபெறப் போகும் தாக்குதலுக்கான ஒத்திகை எனலாம்.

ஆக, எதிர்வரும் காலங்களில் நாட்டில் சட்டம் சீர்குலைந்து எங்கும் கலவரமும் களேபரமும் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டென்பதை உறுதிப்படக் கூறமுடியும்.

இந்த ஆபத்தான சூழ்நிலை எங்ஙனம் தணியும் என்பதைக் கூறமுடியாவிடினும் எதிர்வரும் காலத்தில் பஞ்சத்தால் மக்கள் பெரும் பாதிப்படைவர் என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

எனவே எதிர்காலத்தில் ஏற்படப் போகும் பஞ்சத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில், தமிழ் மக்கள் தங்களிடம் இருக்கக்கூடிய நெற்தானியத்தைச் சேமித்து வைக்க வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

ஏனெனில், பியர் குடிபானத்தை உற்பத்தி செய்வதற்கு, தமிழர் தாயகத்தில் விளையும் அரிசி பயன்படுத்தப்படுவதாகவும் இதன் பொருட்டு பியர் உற்பத்தியாளர்கள் தமிழர் பிரதேசத்தில் கணிசமான நெல்லைக் கொள்வனவு செய்வதாகவும் அறிய முடிகிறது.

எனவே நாட்டு நிலைமையை உணர்ந்து நம் வீடுகளில் நெல்லைக் களஞ்சியப்படுத்தி எம் மக்களின் ஜீவாதாரத்துக்குப் பேருதவி புரிந்து அறம் காப்போம்.

# பைத்தியக்காரர்களைப்போல செயற்பட்டால் சபையை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது

## சபாநாயகர் கடும் விசனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை குறித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடுமையாக அதிருப்தி வெளியிட்டார். பைத்தியகாரர்களைப்போல் செயற்பட்டால் சபை நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது.

எதிர்க்கட்சித் தலைவர் தமது தரப்பினரை முறையாக வழிநடத்த வேண்டும் இல்லாவிட்டால் சபை நடவடிக்கையினை ஒத்திவைக்க நேரிடும் என சபாநாயகர் எதிர்க்கட்சி தலைவரை நோக்கி குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தொடர் ஆரம்பத்தின் போது பிரதி சபாநாயகர் தெரிவு விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவரின் தாயார் நடேசனுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக மொஹமட் முஸாம்மில் சபையில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் எதிர்த்தரப்பினர் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாசவின் பாரியார் 87 வயதுடைய மூத்த பிரஜை நடேசனின் இல்லத்தில் ஒன்றிணைந்த அரசியல் சூழ்ச்சி செய்வதாக அவர் (மொஹமட் முஸாம்பில்) குறிப்பிட்டுள்ளார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது என எதிர்க்கட்சியின் உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்டு மொஹமட் முஸாம்பில் சபையில் குறிப்பிட்ட விடயம் நூற்றுக்கு நூறு வீதம் சரி.அரசியல் டீல் நடவடிக்கைகளுக்காக தாயாரை நாம் பாவிக்கவில்லை என குறிப்பிட்டார்.

இதன்போது எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தன் மதத்தை காட்டிக் கொடுத்த மத துரோகி இன்று என் தாயாருக்கு எதிராக பொய் குற்றச்சாட்டை முன்வைக்கிறார். அனைத்து பொய்களையும் எதிர்கொள்ள தயாராக உள்ளோம் என ஆவேசமாக குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஆசனங்களில் இருந்து எழுந்து உரையாற்றுவதற்கு அனுமதி கோரியதால் அமைதியற்ற நிலைமை தோற்றம் பெற்றது. தயவு செய்து ஆசனங்களில் அமருங்கள். எதிர்க்கட்சி தலைவரே உங்களுக்கு இவர்களை வழிநடத்த முடியாவிடின் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது பயனற்றது, பைத்தியம் போல் செயற்பட்டால் எவ்வாறு சபை நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வது, இவ்வாறு நடந்து கொண்டால் சபை நடவடிக்கையினை இடைநிறுத்தி சென்று விடுவேன் என சபாநாயகர் எதிர்க்கட்சி தலைவரை நோக்கி குறிப்பிட்டார். (ம-7)

# ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாகப் பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையை இதுவரை ஆண்ட எந்தவொரு அரசும் வங்குரோத்து நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்லவில்லை. எனினும், இந்த அரசு நாட்டை வங்குரோத்து அடைய வைத்துள்ளது.

நாட்டை வங்குரோத்து அடைய வைத்த ஆட்சியாளர்களுக்கு என்ன தண்டனை என நீதி அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரால் இன்று வெளியில் தலைகாட்ட முடியவில்லை. பாராளுமன்றத்துக்கு முன்பாகவும் கிராமம் ஒன்று உருவாகியுள்ளது. எம்மையும், எமது உறவினர்கள் திட்ட ஆரம்பித்துள்ளனர். பாராளுமன்றத்தில் கதைக்கின்றீர்கள், என்னதான் தீர்வு என அவர்கள் கேட்கின்றனர். இதற்கு என்ன பதிலை வழங்குவது?

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கினால், அப்பணத்தைக் கொள்ளையடிக்க முடியாது என்பதால்தான் ஆட்சியாளர்கள் ஐ.எம்.எப்பை அன்று நாடவில்லை. தற்போது தலைக்கு மேல் வெள்ளம் வந்துள்ள நிலையில்தான் அங்கு சென்றுள்ளனர் என்றார். (ம-7)

# மக்கள் விருப்பங்களுக்கு செவிசாய்க்காவிடின் நாட்டில் கலவரம் ஏற்படும் ஆபத்து

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை மக்களின் விருப்பங்களை அரசாங்கம் செவிசாய்க்காவிடின் நாட்டில் கலவரம் ஏற்படும் ஆபத்து உள்ளதாகவும், அந்தக் கலவரத்தை அடக்குவதற்கு இராணுவத்தையே அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பயன்படுத்துவார் எனவும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எச்சரித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தேர்தல் ஒன்றே நாட்டின் அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்கான ஒரே வழி எனக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர்,

தேர்தல் நடத்தப்படும் வரை, மக்கள் நம்பிக்கையை பெறும் வரை இந்தச் சபையின் உறுப்பினர்கள் வீதியால் செல்ல முடியாது என்றார். (ம-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



## உண்மையான ஆனந்தத்தைப் பெற

❖ தியான நிலைதான் வாழ்வின் மிக உயர்ந்த நிலை. ஆசை இருக்கும் வரை உண்மையான இன்பம் வரமுடியாது. தியான நிலையில் இருப்பவர்கள், காட்சி நிலையிலிருந்து பொருட்களின் உண்மையை உணர்பவர்களே உண்மையான ஆனந்தத்தையும் இன்பத்தையும் பெறுகின்றனர்.

❖ விலங்குகளுக்கு புலன்களில் இன்பம், மனிதனுக்கு அறிவில் இன்பம், தேவர்களிற்கு ஆன்மிக தியானத்தில் இன்பம். இந்த தியான நிலையை அடைந்தவர்களுக்கு மட்டுமே இந்த உலகம் உண்மையிலேயே அழகாக இருக்கும்.

❖ எதையும் விரும்பாமல் எதனுடனும் ஒட்டிக்கொள்ளாமல் இருக்கும் ஒருவனுக்கு இயற்கையின் பல்வேறு மாற்றங்களும் அழகு மற்றும் நுண்மையின் ஒரு அற்புத வெளிப்பாடாகவே இருக்கும். இவை எல்லாம் தியானத்தில் அறியப்பட வேண்டியவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

**கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 60**

**அனுராதபுரம் மாவட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் சிறுபான்மைச் சமூகங்கள்-2012**

| பிரதேச செயலகம் | தமிழர் | முஸ்லிம் |
|---|---|---|
| பதவிய | 16 | 1 |
| கெபித்திகொல்லாவை | 41 | 2086 |
| மதவாச்சி | 282 | 2785 |
| மஹவிலச்சி | 43 | 5 |
| மத்திய நுவரகம் பலாத்த | 899 | 5294 |
| ரம்பாவ | 56 | 5664 |
| கஹட்டகஸ்திகிலிய | 210 | 8169 |
| ஹொரவ்பொத்தானை | 101 | 9802 |
| கலென்பிந்துனுவெவ | 54 | 1382 |
| மிஹிந்தலை | 116 | ·1613 |
| நுவரகம் பலாத்த கிழக்கு | 531 | 2953 |
| நாச்சதுவ | 55 | 3339 |
| நொச்சியாகம | 296 | 1982 |
| ராஜாங்கணை | 14 | 1 |
| தம்புத்தேகம | 30 | 5 |
| தலாவ | 117 | 629 |
| திரப்பணை | 75 | 1649 |
| கெக்கிராவை | 1641 | 10904 |
| பலுகஸ்வெவ | 160 | 16 |
| இப்பலோகம | 244 | 5360 |
| கல்னேவ | 101 | 2280 |
| பலாகல | 123 | 4773 |
| மொத்தம் | 5205 | 70692 |

### அனுராதபுர மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் , வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்திற்கு 21 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி அனுராதபுரமாவட்டம் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

அனுராதபுர மர்வட்டத்தில் 22பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 694 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 860,575 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 78,234 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

அனுராதபுர மாவட்ட செயலகத்தில் 09.11. 2017 காலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 09 பிரேரணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்பிக்கும் படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 05 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 14 பிரேரணைகளை குழு பெற்றுக் கொண்டது.

சில பிரேரணைகள் பிரதேச செயலக பிரிவுகளை அல்லது பிரதேச செயலக பிரிவுகளின் பகுதிகளை இணைத்து தேர்தல் தொகுதிகளாக மாற்ற பரிந்துரைக்கப்பட்டிருந்தன, அவற்றுள் சில 11 தேர்தல் தொகுதிகளும் அமையும் முறையை உள்ளடக்கி இருந்தன. மற்றைய பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறைபற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தரவில்லை.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால் , வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்திற்கு 21 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி அனுராதபுர மாவட்டம் 11 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக் கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமான வரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது. மற்றும் தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரியின் கணிசமான விலகல் வரம்புகளுக்குட்பட்டதாகவும், 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டும் நடவடிக்கை எடுத்துள்ளது.

**அனுராதபுர மாவட்டத்தில் 22 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 694 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 860,575 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 78,234 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

சில பிரேரணைகள் சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை பரிந்துரைத்திருந்தன. மற்றைய பிரேரணைகள் முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்காக ஒரு தேர்தல் தொகுதியை நிறுவுமாறு பரிந்துரைத்திருந்தன.

**சில பிரேரணைகள் சமூகங்களின் பிரதிநித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை பரிந்துரைத்திருந்தன. மற்றைய பிரேரணைகள் முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்காக ஒரு தேர்தல் தொகுதியை நிறுவுமாறு பரிந்துரைத்திருந்தன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு மாவட்ட சனத்தொகையிலும் பெரிய சிறுபான்மை சமூகம் (முஸ்லிம்கள்) 8% உள்ளடங்கி இருந்ததை குழு அவதானித்தது. ஒரு தேர்தல் தொகுதிக்குரிய சனத்தொகையின் சராசரியின் 90% அளவு முஸ்லிம்கள் இம் மாவட்டத்தில் இருந்தபோதும் முஸ்லிம்களை ஒரு தேர்தல் தொகுதிக்குள் இணைக்கக்கூடிய சாத்தியம் இல்லை, ஏனென்றால் அவர்கள் மாவட்டத்தில் மொத்தமாக இருக்கும் 22 பிரதேச செயலக பிரிவுகளுள் 17 பிரதேச செயலக பிரிவுகளில் பரந்து வாழ்கின்றனர்.

**முழு மாவட்ட சனத்தொகையிலும் பெரிய சிறுபான்மை சமூகம் (முஸ்லிம்கள்) 8% உள்ளடங்கி இருந்ததை குழு அவதானித்தது. ஒரு தேர்தல் தொகுதிக்குரிய சனத்தொகையின் சராசரியின் 90% அளவு முஸ்லிம்கள் இம் மாவட்டத்தில் இருந்தபோதும் பரந்து வாழ்கின்ற முஸ்லிம்களை ஒரு தேர்தல் தொகுதிக்குள் இணைக்கக்கூடிய சாத்தியம் இருக்கவில்லை.**

இதன் காரணமாக ஒரு பல்அங்கத்தவர் தேர்தல் தொகுதியில் சிறுபான்மையின் பிரதிநிதி ஒருவர் தெரிவு செய்யப்படுவது சாத்தியமற்றது என்பதை குழு அடையாளம் கண்டு கொண்டது. மேலும் 8 பிரேரணைகளுக்கு பதிலளிக்கும் வகையிலும் எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து இயலக்கூடிய வகையில் குறிப்பிட்ட இரு தொகுதிகளுக்குள் அவர்களின் வாக்குப்பலம் ஒவ்வொன்றுக்குள்ளும் 22% மேல் செறிவாக இருக்கும் வகையில் உள்ளடக்கப்பட்டு தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு பிரேரணை எல்லை பிரிப்பின் போது உள்ளூர் அதிகாரசபை எல்லைகளை அடிப்படையாக எடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அதனுடன் மற்றொன்று பிரதேச செயலகப் பிரிவுகளின் எல்லைகளை எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப்பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும்.

குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகள் போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது. அதே நேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறுபோடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது.

எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது.

(தொடரும்...)

## அத்தியாவசிய...

அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் பல பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. இதனால் அவசர சத்திரசிகிச்சை, கர்ப்பவதித் தாய்மார்களுக்கான சத்திரசிகிச்சை தவிர்ந்த ஏனைய சத்திரசிகிச்சைகள் செய்யமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

மயக்கமருந்துகள், சேலைன், சத்திரசிகிச்சையில் அதிகமாகத் தேவைப்படும் பெட்டடின் உட்பட பல மருந்துகள் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே உபயோகிக்கக்கூடியதாக உள்ளன. புற்றுநோய்களுக்கான சிகிச்சை உட்பட பல சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளமுடியாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பொதுமக்களை விழிப்படைய வைத்தல் அவசியம் தேவை. விபத்துக்கள், குழு மோதல்கள், கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து தற்போதைய சூழலை எதிர்கொள்ள அனைவரும் உதவுதல் வேண்டும். மேலும் வைத்தியசாலைச் சமூகம் மருத்துவ சேவையினைத் தொடர மனித நேய மருத்துவ அவசர உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது என்றுள்ளது. (ம-7,33)

## பாராளுமன்ற...

கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

பாராளுமன்றத்திற்கு பிரவேசிக்கும் வீதியினை மறித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தது.

மாணவர்கள் பொலிஸாரின் வீதித் தடையினை மீறி பாராளுமன்ற வளாகத்திற்குள் உட்செல்ல முற்பட்ட போது, அவர்க்ள் மீது பொலிஸாரர்ல் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய சபை அமர்வில் சுட்டிக்காட்டியுடதுடன், உடனடியாக சபாநாயகரை சபை அமர்விற்கு அழைக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அத்துடன், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் விவாதிப்பதற்கான காலத்தையும் உடனடியாக பெற்றுத் தருமாறு அவர்கள் கோரியிருந்தனர்.

இதனால் பாராளுமன்றில் அமைதியின்மை ஏற்பட்டிருந்த நிலையில், சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைப்பதாக சபைக்கு தலைமை தாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஷேஹா விதானகே அறிவித்தார்.

இதனையடுத்து சபை நடவடிக்கை மீண்டும் ஆரம்பமான போது, சபாநாயகர் ம்ஹிந்த யாப்பா அபேவர்தன பங்கேற்றதுடன், எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார். (ம-7)

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 06/05/2022 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1102 |

| வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| M | 18 | 10 | 26 | 33 | 34 |

**HANDAHANA**

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 2022.05.06 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 063 |

| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| கும்பம் | 01 | 48 | 52 | 53 | கும்பம் |

தேசிய லொத்தர் சபை

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 2022/05/06 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4754 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| K | 3 | 3 | 3 | 1 | 8 | 6 |

தேசிய லொத்தர் சபை

**தன நிதானய**

திகதி - 2022.05.06

சீட்டிழுப்பு இலக்கம் - 784

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| X | 08 | 43 | 75 | 76 |

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4334

உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

## ரஞ்சித்...

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து முதல் தடவையாக இராஜினாமா செய்திருந்திருந்தார்.

பின்னர் நேற்று முன்தினம் புதிய பிரதி சபாநாயகருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றிருந்த நிலையில், அதில் 148 வாக்குகளை பெற்று மீண்டும் பிர்தி சபாநாயகராக இரண்டாவது தடவை அவர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நெருக்கடிக்கு...

பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நேற்று பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் சபாநாயகர் தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## ஹர்த்தாலால்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் தற்போதைய அரசை அதிகாரத்திலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தி இலங்கை முழுவதும் நேற்று ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச, தனியார் துறைகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

இதற்கு வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட நாடு முழுவதும் அனைத்து நகரங்களிலும் வர்த்தகர்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

இதனால் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல மூடப்பட்டதுடன் நகரங்களில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன.

இதேவேளை, தனியார் பஸ் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தன. அத்துடன் ரயில் சேவைகளும் நிறுத்தப்பட்டன. அதேபோன்று இ.போ.ச. பஸ் சங்கங்கள் சில போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

1953ஆம் ஆண்டு இடம்பெற்ற ஹர்த்தாலுக்குப் பின்னர் முன்னெடுக்கப்படும் பெரிய ஹர்த்தால் போராட்டமாகவே இது பார்க்கப்பட்டது.

இதேவேளை, நேற்று ஹர்த்தாலுக்கு வலுச் சேர்க்கும் வகையில் நாட்டின் பல இடங்களில் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஆசிரியர், அதிபர்கள் நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியதன் காரணமாக பல பாடசாலைகளின் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன.

நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்ட பொது நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு ஆதவளித்து நாட்டின் பல பாகங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காரணமாக பல வீதிகள் மூடப்பட்டன. சில வீதிகளில் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, ஆசிரியர், அஞ்சல், சுகாதாரம் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ராஜகிரிய சுற்றுவட்டத்தில் பேரணியை ஆரம்பித்திருந்தனர்.

இதேவேளை, இலங்கை மத்திய வங்கியின் நான்கு தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை வங்கி சேவையாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் நேற்று முற்பகல் மத்திய வங்கிக்கு முன்பாக எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விவசாய உற்பத்தி இறக்குமதி மற்றும் ஏற்றும்தி செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன.

நிர்வாக முடக்க்ல் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக இந்த செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதாக விவசாய ஆலோசகர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க ஏற்றுமதி வலய நுழைவாயில், எவரிவத்தை சந்தியில் மூடப்பட்டிருந்தது. பணியாளர்கள் முன்னெடுக்கும் போராட்டம் காரணமாக, இந்த நிலை ஏற்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, கண்டி, புஸல்லாவை, நுவரெலியா, பதுளை மற்றும் ஹட்டன் ஆகிய நகரங்களில் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, நுவரெலியா நகர்ப் பகுதிகளில் பெருந்தோட்ட மக்களும் தமது எதிர்ப்பை தெரிவித்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசே வீட்டுக்குப் போ" எனக் கோரி கோஷமிட்டனர். (ம-7)

## பிரதமர்...

பதியால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு பல அமைச்சரவை அமைச்சர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், சில அமைச்சரவை அமைச்சர்கள் ஜனாதிபதியின் இந்த தீர்மானத்திற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## அவசரகால...

ஜனாதிபதியால் இது தொடர்பில் விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில் பொதுமக்கள், அரசியல்வாதிகள், சர்வதேச நாடுகள், மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்ட நிலையில் அவசரகால நிலை மீளப்பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்தால் பொலிஸாருக்கும் அதிகாரங்கள் அதிகரிக்கும்.

குறிப்பாக தேவைப்படும் ஒருவரை நீதிமன்ற உத்தரவின்றியே கைது செய்து, குறிப்பிட்ட காலம் வரை அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் பொலிஸார் தடுத்து வைக்கமுடியும்.

தேவைப்படும் இடத்தில் துப்பாக்கி பிரயோகம் செய்யவும் பொலிஸாருக்கு அதிகாரம் இருக்கும்.

பாதுகாப்பை பலப்படுத்த இராணுவத்தினரும் ஏனைய பாதுகாப்பு படையினரும் சேவையில் ஈடுபடுத்தப்படலாம்.

தேவையான இடங்களில் திடீர் சோதனைச் சாவடிகள்கூட அமைக்கப்படலாம்.

பொது இடங்களில் ஆட்கள் கூடுவது மட்டுப்படுத்தப்படும். இது ஆர்ப்பாட்டங்கள் கலவரங்கள் உருவாவதை தடுக்க உதவும்.

கலவர நேரங்களில் வன்செயலில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவும் பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்படலாம்.

தேவையான இடங்களில் ஊரடங்கு சட்டங்க்ளை பிறப்பிக்க முடியும்.

நிலைமையை முடிவு செய்ய தேவையான அதிகாரங்கள் அரசாங்க அதிபருக்கும் மஜிஸ்ட்ரேட்டுக்கும் வழங்கப்படும்.

ஊடகங்கள் மீது கட்டுப்பாடு கொண்டு வரமுடியும். தேவைப்படின் தணிக்கையும் அமலுக்கு வரலாம். (ம-7)

## ஒன்று...

தியதற்காக கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்களுக்கு இலங்கைப் பார்ாளுமன்றத்திற்கு வெளியே அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்யவும், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் தமது பாராளுமன்ற உறுப்பினர்களிடம், நிலைப்பாடுகளை வெளிப்படுத்தவும் அவர்களுடன் பேசவும் உரிமை உண்டு.

மனித உரிமைகளை அமைதியான முறையில் செயற்படுத்தியதற்காக கைது செய்யப்பட்ட அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட வேண்டும்.

இலங்கை அதிகாரிகள் கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைகளை மதிக்க வேண்டும். அவற்றை பாதுகாக்க வேண்டும். ஊக்குவிக்க வேண்டும் , நிறைவேற்ற வேண்டும். மேலும் மக்கள் தங்கள் மனித உரிமைகளை சுதந்திரமாகப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். மனித உரிமைகள் மீது சுமத்தப்படும் எந்தவொரு கட்டுப்பாடுகளும் சட்டத்தால் மாத்திரமே வழங்கப்பட வேண்டும்.

இந்த கைதுகள் தன்னிச்சையானதும் சட்டவிரோதமானதுமாகும் என்பது சந்தேகத்திற்கிடமற்றது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ராஜினா...

தியில் அண்மையில் பதவியேற்ற அமைச்சரவை மீண்டும் கலைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

சமகால அமைச்சரவையிலுள்ள அமைச்சர்கள் பதவி விலகுவது குறித்து நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கடும் கோபம் அடைந்த ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் இடையில் கடும்வாக்குவாதம் இடம்பெற்றதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

விசேட அமைச்சரவை கூட்டத்திற்கு நேற்று ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அதற்க்மைய நேற்று மாலை 5.30இற்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், கோண்டாவில், மானிப்பாயை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை.

(11304)

தொடர்புகளுக்கு:-

**077 034 4185**

# அரசு தவறிழைத்துவிட்டது ஒப்புக்கொண்டார் நாமல்

(கொழும்பு)

அரசாங்கம் தவறுகளை செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார் முன்னாள் அமைச்சரும் பிரதமர் மகிந்தவின் மூத்த புதல்வருமான நாமல் ராஜபக்ஷ.

பிபிசிக்கு அளித்த பிரத்தியேக நேர் காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார முடிவுகளை அரசியல் வாதிகளால் எடுக்க முடியாது எனத் தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ, அதேநேரம் தங்களுக்கு அறிவுரை வழங்கிய அதிகாரிகள் தவறான ஆலோசனைகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.(ம-7)

## Win Repair

சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும் உங்கள் வீட்டிற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.

(11303)

தொடர்புகளுக்கு:-

**077 964 8942**

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

(C-4270)

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய்
- சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி
- கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு
- சங்கானை • புதுக்குடியிருப்பு • தீதிவகலை

- பயிற்சிக்கால கைக்கந்தொகை -15'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.

**0777-068-777**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1980 இல் பிறந்த சதயம் 1 ஆம் பாதம், Accounts Assistant களை வசதிகளும் உடைய மணமகனுக்கு மணமகள் தேடுகின்றோம்.

(11293)

**077 367 1062**

## ஊடக சந்திப்பு 10 - 05 - 2022

விடயம் : **வடக்கின் வியாபார நம்பிக்கை சுட்டெண்**
**(Business Confidence Index of Northern Province- BCI)**

நேரம் : **10-05-2022 காலை10.00 மணி**

இடம் : **Green Grass Hotel ( Green Place Hall)**

வியாபார நம்பிக்கை சுட்டெண் ஆனது தேசிய மற்றும் பிராந்திய ரீதியான பொருளாதார நிலைமைகளை எடுத்துக்காட்டும் ஓர் குறியீடாகும். வடக்கின் வியாபார நம்பிக்கை சுட்டெண் தொடர்பான ஆய்வினை யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றம் மேற்கொண்டுள்ளது. ஆய்வின் முடிவுகளை வெளிக்கொணரும் விதமாக ஊடக சந்திப்பு ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளது. ஆர்வமுள்ள அனைத்து பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களையும் இந்த ஊடக சந்திப்பிற்கு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊடக சந்திப்பினை தொடர்ந்து 10.30 மணிக்கு நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகள் , நுண்ணிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் நெருக்கடி நிலைமையை கையாள்தல் தொடர்பான துறைசார் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற உள்ளது.

கலந்துரையாடலில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பதிவுகளை 08-05-2022 ற்கு முன்னதாக மேற்கோள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். (admin@cciy.lk | 070 366 3604)

Supported by the Federal Ministry for Economic Cooperation and Development | Coordinated by sequa | Implemented by | Local Project Partner CCIY | cooperation partner AHK | BM Partnership | german cooperation

யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றம்
55, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம். (C-4295)

021 222 6608 -9
info@cciy.lk
www.cciy.lk

## பணியாட்கள் தேவை

முன்பள்ளி சிறுவர்களின் நலன் கவனிப்பதற்கும் வகுப்பறையை சுத்தம் செய்வதற்கும் பெண் பணியாட்கள் தேவை. பகுதி நேரமாக பணிபுரிய விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம். வகுப்பறையை சுத்தம் செய்ய பகுதி நேரமாக ஆண்களும் தொடர்பு கொள்ளலாம்.

(C-4296)

**077 244 4172/ 021 222 6242**

## வேலைவாய்ப்பு

நல்லூரடியில் இயங்கும் சுப்பர்மாக்கற் ஒன்றுக்கு பெண் பிள்ளைகள் தேவை.

- அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**077 963 7483**

(11302)

# மரண அறிவித்தல்

## திருமதி பூங்காவனம் இராமலிங்கம்

தோற்றம் 1935.05.10 மறைவு 2022.05.06



மண்கும்பான் மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் தற்போது இல.44/2, அம்மன் வீதி கொக்குவில் கிழக்கில் வசித்து வந்தவருமாகிய திருமதி பூங்காவனம் இராமலிங்கம் நேற்று (2022.05.06) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற தில்லையம்பலம் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் திருஞானசம்பந்தன் (சாவகச்சேரி), அகிலத்திருநாயகி (நல்லூர்), ஜெகநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சிவசுதன் (கொக்குவில்), கமலநாயகி (அமெரிக்கா), தெய்வசிகாமணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காந்திமதி, சண்முகநாதன், இளங்கீரன் (பிரசித்த நொத்தாரிசு), தயாழினி, அருளானந்தம், சிவானந்தன் ஆகியோரின் மாமியாரும் செந்தூரன், மயூரன், தீபா (லண்டன்), சசீலன், சஜீதா, சஜீவன், சஜீனா, சாகித்தியா, சதுர்ஜா, மதுஷா, தேனுஜா, கஜனி, தேவதர்ஷிகா, டர்சனா, டக்சன் (அமெரிக்கா), அஸ்விதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், நடராஜா, சோமன், பர்வதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லக்ஷ்மி, லக்ஷ்மன், திஷா, தரிணி, சரவணன், தரணிகா, கரணிகா, அபிஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருஞானசம்பந்தன் - 077 665 7771
ஜெகநாயகி - 077 475 3351
சிவசுதன் - 077 434 9121
அகிலா - 076 897 6098
தெய்வா - 00447455940722
கமலா - 0014698799365

தகவல்: குடும்பத்தினர்

(11295)

## யப்பான் சைக்கிள்

அறிவுள்ளோரின் தெரிவு

1. லேடீஸ் சைக்கிள்கள்
2. ஜென்ஸ் சைக்கிள்கள்
3. கியர் சைக்கிள்கள்
4. மடக்கும் சைக்கிள்கள்
5. பாரம் ஏற்றும் சைக்கிள்கள்
6. LED ஓட்டோமற்றிக் லைட் சைக்கிள்கள்
7. Baby சைக்கிள்கள்



விலை ரூ 25,000/= இல் இருந்து

இலகுவான ஓட்டம்.
பாட்ஸ் தாராளமாக உண்டு.
வருடா வருடம் கழுவிப் பூட்டுதல்,
திருத்த வேலைகள் இல்லை.
நீண்டகாலப் பாவனை.

விற்பனைக்கு பிந்திய சேவைகள் (திருத்த வேலைகள்)

(C-4297)

**யப்பான் சைக்கிள் பசார்**

கந்தரோடை றோட், சுன்னாகம். (சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை றோட்டில் 500m)

154ம் கட்டை, ஏ9 றோட், கிளிநொச்சி. (இரணைமடுச் சந்தி அருகாமை)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 44 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 7 இலட்சம்**

பின்பகுதியாக உள்ள காணி
**1 பரப்பு - 5 இலட்சம்**

(11300)

**077 658 5999, 074 043 6673**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.